செய்தி வெளியீடு எண்.67-2016 நாள்: 31.10.2016

விழுப்புரம் மாவட்டம் குழந்தைகள் நலக்குழுமத்தில் உதவியாளருடன் கலந்த கணினி இயக்குபவர் பணியிடம் தொகுப்பூதியத்தில், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

****

விழுப்புரம் குழந்தைகள் நலக்குழுமத்தில் உதவியாளருடன் கலந்த கணினி இயக்குபவர் (Assistant Cum Data Entry Operator) பணியிடம் தொகுப்பூதியத்தில், ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவியாளருடன் கலந்த கணினி இயக்குபவர் பணியிடத்திற்கு மாதம் தொகுப்பூதியம் ரூ.9,000. இப்பதவிக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தட்டச்சு (தமிழ்/ஆங்கிலம்) உயர்நிலை பயின்றிருக்க வேண்டும். அடிப்படை கணினி பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டர்களாக இருத்தல் கூடாது.

இப்பதவிக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் (Pass Port Size Photo) 10.11.2016 அன்று மாலை 5.30-க்குள் கண்காணிப்பாளர், அரசினர் குழந்தைகள் இல்லம், சர்வேயர் நகர், சாலாமேடு, விழுப்புரம் என்ற முகவரிக்கு வந்துசேர வேண்டும். விண்ணப்பங்களை மேற்கண்ட முகவரியில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்கள்.9789690961 மற்றும் 04146-257702 என்ற தொலைபேசியிலோ, govtchildhome.vpm@gmail.com என்ற இணையதளத்திலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.